# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>ஜனநாயக நாடுகளுக்கான பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் (PRIDE) பாராளுமன்ற உறுப்பினர்கள் & அதிகாரிகளுக்கான முதலாவது திறன் விருத்தி செயற்திட்டம்</u>**

இந்தியாவின் புது டில்லியில் உள்ள ஜனநாயக நாடுகளுக்கான பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் (PRIDE) ஒருவார காலத்துக்கு நடைபெறும் திறன்விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொள்வதற்காக இவ்வார இறுதியில் இந்தியாவுக்கு பயணிக்கவிருக்கும் முதற்தொகுதி பங்கேற்பாளர்கள் 24 பேரை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் சந்தித்தார்.

2. கௌரவ பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஷ்வி சாலி தலைமையில் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட இலங்கை பாராளுமன்ற அதிகாரிகள் 4 பேர் உள்ளடங்கிய இப்பேராளர்களை உயர் ஸ்தானிகர் இந்திய இல்லத்தில் இன்று வரவேற்றிருந்தார்.

3. 2025 மே 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறும் இப்பயிற்சி திட்டத்தில் பாராளுமன்ற குழுக்களின் முறைமைகள், பாதீட்டு செயற்பாடுகள் & பாராளுமன்றங்கள் இடையிலான சிறந்த அனுபவங்கள், மற்றும் இரு ஜனநாயக நாடுகளிடையிலும் துறைசார் ஏனையவிடயங்களை பகிர்தல் உள்ளிட்ட விடயதானங்கள் உள்வாங்கப்பட்டிருக்கும். இப்பேராளர்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இந்திய கலை மற்றும் கலாசாரத்தின் செழுமையை அறியும் வாய்ப்பைப் பெறுவார்கள், அத்துடன் கள விஜயங்கள் மற்றும் சந்திப்புகள் மூலம், இந்தியப் பொருளாதாரத்தில் குறிப்பாக டிஜிட்டல், தகவல் தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் நகர்ப்புற இயக்கம் சார்ந்த துறைகளில் நடைபெற்று வரும் மாற்றங்களையும் நேரடியாக அறிந்துகொள்வார்கள்.

4. இலங்கை அதிகாரிகளுக்கு திறன் விருத்தி பயிற்சிகளுக்காக பிரத்தியேகமாக கட்டமைக்கப்பட்ட 700 பயிற்சி ஆசனங்கள் வருடாந்தம் ஒதுக்கப்படுமென அண்மையில் 2025 ஏப்ரல் மாதம் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட

விஜயத்தின்போது அறிவித்தமைக்கு அமைவாக இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. முயற்சியாண்மை முதல் விளையாட்டுகள், ஊடகம் முதல் சினிமா வரையான சகல துறைகளையும் உள்ளடக்கியதாக இப்பயிற்சிகள் வழங்கப்படும். 2024 டிசம்பரில் இந்திய அரசாங்கத்தின் நல்லாட்சிக்கான தேசிய நிலையம் (NCGG) மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாதிட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 5 வருடகாலப்பகுதிக்குள் 1500 இலங்கை சிவில் சேவை அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கு மேலதிகமாக குறித்த 700 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

********

கொழும்பு
21 மே 2025